**செய்தி வெளியீடு எண்: 460** **நாள்: 01.08.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

### சென்னை மாவட்டத்திலுள்ள பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாநிலம் முழுவதும் பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் சென்னை மாவட்டத்திலுள்ள பள்ளி/கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் சென்னை, எழும்பூர், மாநில அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் காலை 9.00 மணியளவில் நடைபெற உள்ளன.

**நடைபெறும் நாள் : அரசு மாநில மகளிர் மேல்நிலைப்பள்ளி,**
**எழும்பூர், சென்னை–8.**
**போட்டி நடைபெறும் நாள் : பள்ளிக்கு–07.08.2019**
**: கல்லூரிக்கு–09.08.2019**

ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 10,000/–மும், இரண்டாம் பரிசாக ரூபாய் 7000/–மும், மூன்றாம் பரிசாக ரூபாய் 5000/–மும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்.

போட்டிக்கான தலைப்புகள் போட்டி தொடங்கும்போது அறிவிக்கப்பெறும். போட்டி முடிவுகள் அன்றே அறிவிக்கப்பெறும். போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பயிலும் பள்ளியின் தலைமையாசிரியர் /கல்லூரியின் முதல்வரிடம் உரிய படிவத்தில் பரிந்துரையைப் பெற்று போட்டி நாளன்று துணை இயக்குநரிடம் நேரில் அளிக்க வேண்டும். போட்டி விதிமுறைகள், விண்ணப்பப் படிவம் www.tamilvalarchithurai.com என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இந்த அரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**